செ.வெ.எண்: 31/2021 நாள்:16.07.2021

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கினங்க, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் ரூ.42.64 இலட்சம் மதிப்பீட்டில் 2 புதிய தார்சாலை அமைக்கும் பணிகளுக்கான துவக்க விழாவினை தொடங்கி வைத்தார்.**

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சேர்வகாரன்பாளையத்தில் **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** திட்டத்தின் கீழ் 66 பயனாளிகளுக்கு ரூ.20.20 இலட்சம் மதிப்பீடிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி மற்றும் ரூ.42.64 இலட்சம் மதிப்பீட்டில் 2 புதிய தார்சாலை அமைக்கும் பணிகளுக்கான துவக்க விழாவை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ்.வினீத் இஆப, அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (16.07.2021) தொடங்கி வைத்தார்.

***மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது***

மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று தமிழக மக்களின் வாழ்வு வளம்பெற பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று அதனை பரிசீலித்து அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க ”**உங்கள் தொகுதியில் முதலமைச்சர்** ” என்ற திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று ஏறத்தாழ 70 நாட்கள் கடந்த நிலையில் கொரோனா தொற்று படிப்படியாக குறைந்து விரைவில் நோய்த்தொற்று இல்லாத மாநிலம் என்ற நிலையை தமிழ்நாடு அடையும். கடந்த ஒன்றரை காலமாக பொதுமக்கள் கொரோனா நோய் தொற்று காரணமாக மிகவும் கடினமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தனர். கொரோனா தொற்று இரண்டாம் அலையில் நோயின் வீரியம் அதிகமாக இருந்த காரணத்தினால் வேகமாக தொற்று பரவக்கூடிய சூழல் ஏற்பட்டு அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதி, ஆக்ஸிஜன் மற்றும் ரெம்டெசிவர் மருந்துகளின் தேவை அதிகமாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ஊரடங்கு மற்றும் மருத்துவ நிபுணர்கள் குழு பரிந்துரையின் அடிப்படையில், நோய்த்தொற்று குறைவதற்கு அனைத்து அரசுத்துறைகளும் ஒன்றிணைந்து போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு தற்பொழுது நோய்த்தொற்றின்

தாக்கம் குறையக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது அறிவித்துள்ள ஊரடங்கு தளர்வினால் பொதுமக்கள் தங்களுடைய இயல்பு வாழ்க்கையை நோக்கி மெல்ல நகர தொடங்கியுள்ளனர். அடுத்த மாதம் நிதி நிலை அறிக்கையினை தாக்கல் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அதில் ஒவ்வொரு துறைக்கும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் விதமாக நிதிகள் ஒதுக்கப்பட்டு கிராமம் மற்றும் நகர்ப்புறத்தில் தேவையான பகுதிகளில் சாலை வசதி, தெருவிளக்கு, குடிநீர் வசதி போன்ற அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் விரைவில் செயல்படுத்தப்படும். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில் அதிகளவு மனுக்கள் பெற்று நடவடிக்கை எடுத்ததில் தமிழகத்தில் திருப்பூர் மாவட்டம் 3 ஆம் இடத்தில் உள்ளது. இதே போல் இன்னும் வரும் காலங்களில் மக்கள் நலத்திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி அதனை செயல்படுத்த தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்றப்படுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களின் அடிப்படையில், வருவாய்த்துறையின் மூலம் 66 பயனாளிகளுக்கு ரூ.20.20 இலட்சம் மதிப்பீட்டிலான 16 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, 3 பயனாளிகளுக்கு விதவை உதவித்தொகை 1 பயனாளிக்கு கணவரால் கைவிடப்பட்ட உதவித்தொகை மற்றும் 43 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறையின் மூலம் 1 நபருக்கு கொரோனா நோயினால் பெற்றோரை இழந்தவருக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிலான பெற்றோர் இழப்பீட்டு நிதியுதவித்தொகையும், மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.10,564/- மதிப்பீட்டிலான மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம் என மொத்தம் 66 பயனாளிகளுக்கு ரூ.20.20 இலட்சம் மதிப்பீடிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், இலக்கம்மநாயக்கன்பட்டி ஊராட்சி, சாலைப்புதூரில் தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2020-2021 திட்டத்தின் கீழ் ரூ.42.64 இலட்சம் மதிப்பீட்டில் 2 புதிய தார்சாலை அமைக்கும்

பணிகளுக்கான துவக்க விழாவை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இதனைத்தொடர்ந்து, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், வடசின்னாரிபாளையம் ஊராட்சி குங்காருபாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.15.27 இலட்சம் மதிப்பீட்டிலான புதிய பால் கொள்முதல் நிலையத்திற்கான கட்டுமானப்பணிகளுக்கான துவக்க விழாவை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.கணேசமூர்த்தி, தாராபுரம் சார் ஆட்சியர் திரு.ஆனந்த் மோகன் இஆப, மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்,**